தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் உ௮ | திருவள்ளுவர் யாண்டு ககஅ௩
நந்தன—புரட்டாசி
1952—செப்டம்பர் | மலர் ௪

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

கலைமகள் விழா.

நிகழும் திருவள்ளுவர் யாண்டு, 1983, நந்தன, புரட்டாசி, ௪-ஆம் நாள் (19–9–52) தொடங்கி, நம் சங்கத் தமிழ்ப்பெருமன்றத்தில் கலைமகள் விழா நடைபெறும்.

ஒவ்வொரு நாளும் மாலை 6 மணிக்குத் தொடங்கி, நிகழ்ச்சி நிரலில் கண்டபடி அறிஞர்கள் சொற்பொழிவு நிகழும்.

அன்பர்கள் வருகை வேண்டப் பெறுகிறது.

கரந்தை,
17—9—52.

ஆ. யா. அருளானந்தசாமி நாடார்,
தலைவர்.

நிகழ்ச்சி நிரல்.

19–9–52 கரந்தைக் கவியரசு, திரு. R. வேங்கடாசலம் பிள்ளை அவர்கள் —கவி இன்பம்

20–9–52 வித்துவான் திரு. ச. பாலசுந்தரம் அவர்கள் —அவலச் சுவை

21–9–52 வித்துவான் திரு. ந. இராமநாதன் அவர்கள் —இன்பச் சுவை

22–9–52 வித்துவான் திரு. அடிகளாசிரியர் அவர்கள் —வீரச் சுவை

23–9–52 ஆசிரியர் திரு. T. A. இராசாமி பிள்ளை அவர்கள் —கலையும், இசையும்

24–9–52 வித்துவான் திரு. சி. கோவிந்தராசன் அவர்கள் —கம்பரும், கலைமகளும்.

25–9–52 பண்டிட் திரு. S. சீதாராமையர் அவர்கள் —காளிதாசரும், கலைமகளும்

26–9–52 கல்லூரித்தலைவர் வித்துவான் திரு. உ. பழநி, M. A. அவர்கள் —சங்ககாலத் தமிழர் வாழ்வு

27–9–52 வித்துவான் திரு. அ. திருஞான சம்பந்தன் அவர்கள் —வள்ளுவரும், சேக்கிழாரும்

28–9–52 ஆசிரியர் திரு. அரங்கநாத தவே, B. A., L. T. அவர்கள் —கலைமகள் அருளும், கவடி நிலையப் பொருளும்

---

9 தொண்டு (ஒன்பது) 90 தொண்பது 900 தொண்ணூறு 9000 தொள்ளாயிரம் என வழங்குதல் பொருந்துமா?

திரு. T. இராமநாத பிள்ளை, B. A., (Lond)
யாழ்ப்பாணம்,

கடைச் சங்க காலத்தில் தொகுக்கப் பட்ட பரிபாடல் களில் ஒன்று.

"......ஒன்றெனஇரண்டென மூன்றென நான்கென ஐந்தென ஆறென வேழென வெட்டெனத் தொண்டென நால்வகை யூழியெண் ணவிற்றுஞ் சிறப்பினை" எனத் திருமாலை வழுத்துகின்றது.

இவ்வடிகளில் தொண்டென்பது ஒன்பதைச் சுட்டுகின்றது. இத் தொண்டு என்னும் சொல் நிலை மொழியாக நின்று முறையே நூறு ஆயிரம் என்னும் வருமொழிகளுடன் புணரத் தொண்ணூறு தொள்ளாயிரம் என்னும் தொடர்மொழிகள் தோன்றியவை எனக்கருத இடமுண்டு. தொண்டு+பத்து=தொண்பது: இத்தொண்பது என்னும் பதம் வழக்கற்றது போலும் இது நிற்க.

ஆசிரியர் தொல்காப்பியனார் ஒன்பது என்னும் நிலைமொழியும் முறையே பத்து நூறு என்னும் வருமொழியும் சேர்ந்து தொண்ணூறு தொள்ளாயிர மாகுமெனச் சூத்திரம் செய்திருக்கின்றனர்.

ஒன்பா னொகரமிசைத் தகரமொற்று
முந்தை யொற்றே ணகார மிரட்டும்
பஃதென் கிளவி யாய்தபக ரங்கெட
நிற்றல் வேண்டு மூகாரக் கிளவி
யொற்றிய தகரம் றகர மாகும்.

(எழுத்ததிகாரம் 445)

ஒன்பான் முதனிலை முந்து கிளந்தற்றே
முந்தை யொற்றே ளகார மிரட்டும்
நூறென் கிளவி நகார மெய்கெட
ஊவா வாகு மியற்கைத் தென்ப
வாயிடை வருத லிகார ரகார
மீறுமெய் கெடுத்து மகர மொற்றும்

(எழுத்ததிகாரம் 463)

ஒன்பது என்னும் ஓசை தொண் எனவும் பத்து என்னும் ஓசை நூறு எனவும் நூறு என்னும் ஓசை ஆயிரம் எனவும் திரியும் என்பது இயற்கைக்கு மாறான தெனத் தோற்றுகிறது.

ஆசிரியர் தொல்காப்பியனுர் என்ன காரணங்கொண்டு மேற்கிளந்த இரு சூத்திரங்க நுலையும் நுதலினுர் என அறிய விரும்புகின்றேன்.

யாழ் நூல்

பேராசிரியர் விபுலானந்த அடிகளார், பதினுன் காண்டு ஆராய்ந்து எழுதிய அரிய, சிறந்த இசை நூல்.

பொருள் பொதிந்தது. தோற்றம் பொலிந்தது.
விலை மலிந்தது.

மெல்லிய தாள்	தாள் உறை	15—0—0
	துணி உறை	18—0—0
தடித்த தாள்	தாள் உறை	18—0—0
	துணி உறை	20—0—0

அஞ்சல் செலவு வேறு,

உமர்காயம் யாத்த (ரூபாயத்.)

(மெய்கண்டான்)

(முற்றொடர்ச்சி : துணர் உஅ, மலர் ரு, பக்கம் 133)

76

என்னுள்ளத்திலும், என் சிறு நரம்புகளிலும் திராட்சை ஊடுருவிப் பாய்கிறது; வறுமையிலுழலும் துறவிகள் கூவுகிருர்கள் ; அவர்கள் கூவட்டும் ; அவர்கள் வெளியே உள்ளார்கள் ; என்னிடத்திலாவது திறவுகோலிருக்கும் கதவு திறக்க.

77

இது எனக்குத் தெரியும் ; உண்மை ஒளி அன்பைத் துலங்க வைப்பினும் அல்லது கோபம் என்னை விழுங்கினும் ஒளி இழந்த கோயிலினும்—ஒரு ஒளி ஒளிரும் மதுக்கடையே மேல்.

78

அறிவற்றதில் உணர்ச்சியைத் தோற்றுவித்து, இன்பச் சுமையைத் துன்பமென மாற்றி—தடை மீறில் என்றும் மீளாத தண்டனை எனல் வியப்பன்ருே.

79

உதவாத உலோகத்திற்கு உயரிய பொன் கொடுக்க வறியோனுக்காணை பிறப்பித்தல் எத்தகைத்து ? பட்டிராத கடனைக் கேழ்ப்பதா ? இதற்கு பதில் பகரவும் முடியாது. ஓ ! வியாபாரம் வருத்த முடையதே.

80

யான் செல்லும் பாதையைச் சுற்றியும் பள்ளங்களும் மதுவுடைய குடங்களும் இருத்தல் உம் செயலன்ருே ! தீவினையினுல் என்னை வளைத்துப் பிடித்துத் தள்ளிப் பாவமென அறைவதும் தங்களுக்குத் திருவுளமோ ?

81

மண்ணுல் மக்களைத் தோற்றுவித்து, பேரின்ப வீட்டுடனே நஞ்சுடை அரவத்தையும் உண்டாக்கினது நீவிரன்ருே ! ஏனைய பாவங்களால் மனித முகம் கருமையாக்கப் பட்டுளது. மன்னித்து விட்டுக் கொடுக்கு மியல்பு மனிதனிடத் துளது.

82

பரியும் நாளாகிய திரையின் கீழ் வறுமைப் பிணியி லுழன்ற ரம்சான் சென்றனரே. மீண்டும் யான் குயவ னமைத்த வீட்டிலே தனிமையாக நிற்கிறேன்; என்னைச் சுற்றியும் களிமண் ணுருவங்க ளிருக்கின்றன.

83

ஏனைய வித, பெரிய—சிறிய—உருவங்கள் தரைமீதும் சுவரிடையும் நின்றன; உரையாடும் பாத்திரங்கள் சில இருந்தன; சில கவனித்தன; சில உரையாடவே இல்லை.

84

"உண்மையில் பல னில்லாம லில்லை. மண்ணால் ஆக்கப் பட்டேன், இத்தகைய உருவமைத்து, பின்னர் ஆக்கப்படு தற்கோ; அல்லது மிதித்து உருக்குலைந்து சிதைந்து மண் ணோடு மண்ணாதற்கோ," என்று ஒன்று கூறிக்கொண் டது.

85

"வெடுவெடுப்பான இளைஞனும் இன்புடன் பருகிய பாண்டத்தை உடைத்தெறியான்; பாண்டத்தை எந்த கை செய்ததோ, அதே கை கோபத்தால் அழிக்கிறது," என்று இரண்டாவது கூறிக்கொண்டது.

86

சிறிது நேர மௌனத்திற்குப் பின்னர் சிறு பாண்டங் களுள் அழகிழந்த ஒன்று கூறியது, "யான் சரிந்திருப்ப தால் அவைகள் என்மீது ஏளனம் செய்கின்றன" பாண் டம் செய்கையில் கை அசைந்ததோ?

87

ஒரு சுபி போன்ற அனல் பாண்டம்—குயவன். அறைந்தது, இவை யாவும் பாண்டம்—குயவன். ஆதலால் பகர்ந்திடுவீர். குயவன் எது? பாண்டம் எது?

88

"ஏன்? பயமுறுத்துகிறவர்கள் நரகத்திற்கனுப்பப் படுவார்கள்; உரு குலைந்து, வாய்ப் பிழந்த பாண்டங்கள் இகழப்படுபவைகளே; மிகவும் நல்லவர் அவர்; எல்லாம் நலமாயிருக்கும்,'! என்று ஒன்றுக்கொன்று உரையாடி யிருந்தன.

89

“நல்லது படைத்தது யார்? வாங்குவது யார்? நீண்ட மறதியால், என் களிமண் உலர்ந்துவிட்டது; ஆனால் பழைய பண்பட்ட நீரால் நீரப்புக; யான் மெதுவாக நலமுறுவேன்,” என்று மற்றொன்று மொழிந்தது.

90

இவ்வாறு ஒவ்வொரு பாண்டமும் பேசிக்கொண்டிருந்ததைச் சந்திரன் பார்த்தது. “உடன் பிறந்தோர்களே! இப்பொழுது கூலிக்காரன் தோளிலுள்ள முடிச்சு கீச்சென் றொலிக்கிறது,” என்று ஒவ்வொரு பாண்டமும் நெருங்கிப் பேசிற்று.

91

கடை நாளில் திராட்சை நீர் அளியுங்கள்; உயிரகன்ற உடலைத் திராட்சை நீரால் குளிக்கவையுங்கள்; அடர்ந்த இலைகள் நிரம்பிய மக்கள் நடமாடும் இளமரக்காவில் என்னைப் புதையுங்கள்.

92

யான் புதையுண்டதை மெய்யாகவே நம்பாதான், புதையுண்ட விடத்தருகே செல்லின் என் சாம்பலும் திராட்சை நீர் வலைபோல் மேலெழும்பி அவனுக்கும் தெரியாது அவனைப் பிடிக்கும்.

93

என்னால் நெடுங் காலமாக விரும்பப் பட்ட யாவும் உலகுக்குத் தீங்காயின; என் புகழை ஒரு சிறு கோப்பையில் மூழ் கடித்தேன்; என் சிறப்பை ஒரு செய்யுளுக்கு விற்றுவிட்டேன்.

94

தீங்கு தகைய உறுதி கொண்டேன்; உறுதிகொண்டபொழுது உணர்வுட னிருந்தேனா? மெள்ள மெள்ள இளவேனிற் காலம் வந்தது; ரோசா மலரும் என் கையையடைந்தது. என் எளிய உறுதி உடைபட்டுத் தூளாயிற்று.

95

மதுவும், மதுத்துரோகியும் ஒருவகை யாதலால் என் புகழுக் கேகேடு விளைந்ததே. நல்லது. மண்ணகத்தில் மதுவும் மதிப்புடன் விற்கப்படுகிறதே.

96

ரோசாமலருடன் இளவேனிற் காலம் மறைகிறது; இனிய இளமைக்குரிய மணம் மூடப்படுகிறது! இராப் பறவை மரக்கிளைமீது பாடிற்று; யார் அறிவர்—எங்கு—எப்பொழுது பறந்த தென்று?

97

கழனியில் மிதியுண்ட கொடி மீளுவதைப்போல் பாலை வன நீரோடை சின்னேரம் இலங்குமாயின் தளர்ந்த யாத்திரையாளன் ஏகுவன் அவண்.

98

காலங்கழிதற்கு முன்னர், முடிவுரு விதிச்சுருளை தேவ தூதனால் தடைபடுத்த வியலுமோ! உரமுடைய பதிப் பாளனைக்கொண்டு மாற்றிப் பதிப்பிக்க வியலுமோ! அல்லது அழிக்க வியலுமோ!

99

ஆ! என்னருமைக் காதலியே! இறைவனுடன் நீயும் யானும் ஒன்றுசேர்ந்து தீங்குடைய திட்டங்களைத் தகர்த்து சுக்கு நூறாக்கி மீண்டும் உள்ளம் விரும்புமாறு புதுப்பிப்போம்.

100

விண்ணிலே வெண்ணிலா நமக்காக மீண்டும் தோன்று கிறது; எப்படி இதற்குப் பின்னர் பெருகி அருகுமோ! இத்தோட்டத்திடையே எப்படி அடிக்கடி இதற்குப் பின் னர் தோன்றி நம்மைப் பார்க்குமோ!—இவை யனைத்தும் பலனற்ற ஒருவருக்கா!

101

ஓ! சகி, தாங்களும் பூங்காவனமேசி யான் நிறுவிய இடமடைந்து விண்ணைப் போலவும், விண்மீன்களைப் போலவும், வெறுங் கிண்ணத்தைக் களிப்புடன் கவிழ்ப் பாயாக.

முற்றிற்று.

உ

பாரதியாரின் நாட்டுணர்வு.

திரு. K. சோமசுந்தரம் பிள்ளை, B. A., B. L., தஞ்சை.

வாழு முயிர்க்குலத்திற்கு நன்மையும், நாட்டிற்கு இன்பமும் உன்னி இயற்கை போல வினைத்தவமியற்றி நிறைமுறையான வாழ்வினை வகுப்பவர் நாட்டுச் சிற்பிகளாவர். வாழ்வின் வடிவை அமைத்து இயக்கும் சமுதாய சிற்பிகளின் கலையுணர்வின் வழிநாட்டின் முன்னேற்றம் விளங்குவதினுன், நாட்டுணர்வு, காலத்தின் தன்மைக்கேற்ப மக்களது இதயத் துடிப்பில் கலந்து முரலுவது கண்கூடு. எனவே நாடுகள்தோறும் எழும் கிளர்ச்சிகளும், கால நிகழ்ச்சிகளும் நாட்டுக் காவலாளர்களாய சமுதாயச் சிற்பிகளின் உலகளாவிய உள்ளத்தின் கண் கருவுற்று உருவாகின்றனவென்பது போதரும். இதுபோன்று தமிழகத்தில் நாட்டுணர்வையும் வீர வாழ்வையும் கலையினைப்பால் அளித்தது பாரதியாரின் வீர வாக்கும் அருள் உழைப்புமென்க. பாரதியாரது நாட்டுப்பற்று எல்லையற்ற தினுன், நாட்டின் இயக்கங்களிலெல்லாம் அது சுதந்தர வுணர்வைக் கட்டவிழ்த்து புது விழிப்பினையும் புத்துணர்வினையும் அளிக்கும் ஆற்றலுடையதாய் வயங்கி, பாரதியாரை நாட்டுச் சுதந்திரக் காவலாளியாக யாக்கிவிட்டது.

பாமர மக்கள் சொந்த நாட்டிலே தமக்குரிய வீரத்தினை மறந்து அச்சமுடன் தம் மானமழிந்து வெந்துயரிலாழ்ந்தும் பிறர்க்கு அடிமை செய்து துஞ்சும் நிலையைக்காணப்பொறுக்காத பாரதியார் 'நாமிருக்கும் நாடு, நம தென்பதறிந்தோம்' என நளினமாக, உறங்கும் மக்களது உணர்வைத் தட்டி யெழுப்பிப் பின்

'சொந்தநாட்டிற் பிறர்க்கடிமை செய்தே
துஞ்சிடோம்—இனி—அஞ்சிடோம்'

'உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே'

என்று விடுதலை முழக்கத்தால் நாட்டுணர்வினை ஊட்டி வான்புகழ் கொண்டார். பாரதியாரின் உள்ளத்திலெழுந்த வீர முழக்கம் பாமர மக்களது பேச்சு வழக்கினிலே திளைத்து தமிழகத்தின் அடிமையினையும் சிறுமைப் போக்கினையும்

தகர்த்து, மக்கள்பால் தீரத்தினையும் வீரத் தினவினையும் விளைத்தது. அவர் நாட்டின் விடுதலைக்காக பராசக்தியை வணங்கிப் பாடிய நாட்டுப் பண்கள், கிளர்ச்சி, முயற்சி முதலிய வைகளில் வீறுபெற்று மக்களுள்ளத்தில் தெய்வக் கனலையும் வீரக் கனலையும் பயனுற வளர்க்கும் மாண்புடையன.

நல்லதுந் தீயதுஞ் செய்திடுஞ் சக்தி
நலத்தை நமக்கிழைப்பாள்.

வலிமை யுடையது தெய்வம்—நம்மை
வாழ்த்திடச் செய்வது தெய்வம்.

தெய்வக் கனல் விளைந்து காக்குமே—நம்மைச்
சேரு மிருளழியத் தாக்குமே

கைவைத்தது பசும் பொன்னாகுமே—பின்பு
காலன் பயமொழிந்து போகுமே.

வலிமை வலிமையென்று பாடுவோம்—என்றும்
வாழுஞ் சுடர்குலத்தை நாடுவோம்!

கலியைப் பிளந்திடக் கையோங்குவோம்—நெஞ்சிற்
கவலை யிருளனைத்தும் நீங்குவோம்!

அமிழ்தம் அமிழ்தம் என்று கூவுவோம்—நித்தம்
அனலைப் பணிந்து மலர் தூவுவோம்!

தமிழிற் பழமறைகள் பாடுவோம்—என்றுந்
தலைமைப் பெருமைபுகழ் கூடுவோம்!

என்ற மந்திரச் சொற்கள் வழிஉறங்கும் உள்ளத்தை பாரதியார் ஆர்வத்தோடு தட்டி எழுப்புகிறார்

இவ்வணம் மக்களுள்ளத்தை தட்டியெழுப்பிய பின்றை, பாரதியார் தமிழ் நெஞ்சம் தழைக்கு மாறு, மக்களை நாட்டு ஆர்வங்களால் குலுங்கச்செய்ய, தமிழ்நாட்டின் சிறப்பினையும், நலத்தினையும் பண்பினையும் தேன் நிகர்இன்பப் பண்கள் வழி முழக்குகிறார். பெருமை தரும் நல்லதனைத்திலும் இணையற்றது

தமது நாடென்று கூறி அது சிறப்பாக அறம், அறிவு, அன்பு, அருள், வண்மை, தண்மை, உண்மை, தவம் யோகம் அனைத்திற்கும் உறைவிடம் எனச் சாற்றுகிறார். தமிழ்நாட்டில் பிறக்கும் பேறே ஒருவருக்கு ஒளிவிளக்கத்தையும் ஆற்றலையும் தரும் என்பது பாரதியாரது உறுதியாகும்.

செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே—எங்கள்

தந்தையர் நாடென்ற பேச்சினிலே—ஒரு
சக்திபிறக்குது மூச்சினிலே

என ஆர்வமுறப் பாரதியார் தமிழ்நாட்டைப் புகழ்ந்து மகிழ்ந்திசைப்பார்.

செந்தமிழ் நாடு, விழுச்சீரெய்திய காதல் ஒழுக்கமும் இனிமைப்பாடமைந்த வீரமும், தலைமைப்பாடமைந்த சமத்துவம், சுத்தம், சுதந்திரம் முதலாய தெய்வப் பண்புகளும் நிறைந்த நாடென்று பாரதியார் அழகுற இயம்புவார்.

வேதம் நிறைந்த தமிழ்நாடு—உயர்
வீரம் செறிந்த தமிழ்நாடு—நல்ல

காதல்புரியும் அரம்பையர் போலிளங்
கன்னியர் சூழ்ந்த தமிழ் நாடு.

செந்தமிழ் நாட்டிற்கு வாய்ந்த அழகொளி பரப்பும் ஆறுகளின் வளம், தந்நீர்மை குன்றாது நாட்டினைக் காத்தளிக்கும் வல்லமையும், அதனால் அந்நாட்டில் வாழும் உயிர்களெல்லாம் தூய்மையும் இன்பமும் தண்மையும் பெற்று விளங்குவன வென்பதையும் புலப்படுத்துவாராயினர்.

காவிரி தென்பெண்ணை பாலாறு—தமிழ்
கண்டதோர் வையை பொருனைநதி—யென
மேவிய ஆறு பலவோடத்—திரு
மேனி செழித்த தமிழ் நாடு.

தமிழ்நாடு செல்வச் செழுமையிலும் செல்வாக்கிலும் சிறந்து விளங்கும் நாடென்றும், நாட்டு மக்களதறிவை முத்தமிழ் முனிவரால் மாட்சியுற வளர்த்து பேணப்பட்ட பீடு கொண்ட நாடென்றும் உணரவைத்தார்,

முத்தமிழ் மாமுனி நீள் வரையே—நின்று
மொய்ம் புறக் காக்குந் தமிழ்நாடு—செல்வம்
எத்தனையுண்டு புவிமீதே—அவை
யாவும் படைத்த தமிழ் நாடு.

நம் நாடு, வெப்பமும் தட்பமும் ஒத்த நிலையிற் பொருந்தி இயற்கை யமைப்புகள் பலவாய்ந்து வாழ்க்கை வளர்ச்சிக்கும் கலையுணர்ச்சிக்கும் இடந்தரும் எல்லையும் புகழும் கொண்ட தனிச் சிறப்புடைய நாடென்பர்.

நீலத் திரைக்கட லோரத்திலே—நின்று
நித்தம் தவஞ்செய்குமரியெல்லை—வட
மாலவன் குன்றம் இவற்றிடையே புகழ்
மண்டிக்கிடக்குந் தமிழ்நாடு

அகமும் புறமுமாய் விரிந்து மெய்ம்மையிற் செலுத்தும் புலமைக் கல்வி முறையும், பல சாத்திரங்களமைந்த பொருளிலக்கணச் சிறப்பு முறையும் ஒருங்கே மணங் கமழப் பெறும் நாடு செந்தமிழ் நாடென்றும், இத்தகைய கல்வி நலம் வாய்த்த கம்பரால் தமிழ்க் கலை, உலகில் தலைசிறந்து புகழ்பெற்ற அரும் பேருண்மையினை தம்பால் விளங்கக் கொண்ட தமிழ் நாடென்றும் திகழ வைத்தார்.

கல்வி சிறந்த தமிழ் நாடு—புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ் நாடு—நல்ல
பலவித மாயின சாத்திரத்தின் மணம்
பாரெங்கும் வீசுந் தமிழ் நாடு.

வாழ்க்கையின் துறைகள் யாவையும் ஆய்ந்து பெரும் பயன் கொண்டு, தெய்வ நலஞ்சான்ற மெய்யுணர் வினராய் வள்ளுவரும், பொருளிலக்கணத்தின் மெய்ப்பொருளின் நுட்பத்தை யாவும் சிலப்பதிகார மென்னும் அணிசெய் காப்பியத்தில் ஆழ்ந்தமையத்தேக்கி படிப்பாருள்ளத்தைக் கொள்ளை கொண்டு விழுமியது உணர்த்தும் தண்டமிழாசான் இளங்கோவடிகளும் வாழ்ந்த நாடு, நம் தமிழ்த் திரு நாடென்பர்,

வள்ளுவன் தன்னை உலகினுக்கே—தந்து
வான்புகழ் கொண்ட தமிழ் நாடு—நெஞ்சை

அள்ளும் சிலப்பதிகார மென்றோர் மணி
யாரம் படைத்த தமிழ் நாடு.

கலிங்கர், வங்கர், கோசலர் முதலானோரைப் பணிகொண்டு இமயம் வரை இருள் கொடுத்து ஆணை செலுத்தும், முடிக்குரிய பண்டைப் பெரு வேந்தர்கள் துலங்கிய நன்னாடு நம் நாடென்பர். மற்றும் சிங்களம், புட்பகம், சாபகத் தீவெல்லாம் விண்ணெட்ட வெற்றி முரசொலித்து, ஆங்கே வாகையுடன் புலிக்கொடியையும், மீன் கொடியையுமேற்றி விளங்கிய திரு நாடென்பர். இஃதோடமையாது, சீனம், யவனம் முதலிய தேயங்கள் செழிக்கச் செழிக்க செல்வம் பொழிந்து புகழ்கொண்டு, எங்கும் கலை ஞானத்தையும் படைத் தொழிலையும், வாணிபத்தையும் நல்லிசையோடு, வியனுற வளர்த்த வளம்பெறு நாடு நந்தமிழ் நாடு எனப் பெருமிதத்துடன் இசைப்பாராயினர்.

சிங்களம் புட்பகம் சாவக—மாதிய
தீவு பலவினுஞ் சென்றேறி—அங்கு
தங்கள் புலிக்கொடி மீன் கொடியும்—நின்று
சால்புறக் கொண்டவர் தாய் நாடு.

விண்ணை யிடிக்கும் தலையிமயம்—எனும்
வெற்பை யடிக்கும் திறனுடையார்—சமர்
பண்ணிக் கலிங்கத்திருள் கெடுத்தார்—தமிழ்ப்
பார்த்திபர் நின்ற தமிழ் நாடு.

சீன மிசிரம் யவனரகம்—இன்னும்
தேசம் பலவும் புகழ் வீசிக்—கலை
ஞானம் படைத் தொழில் வாணிபமும் மிக
நன்று வளர்த்த தமிழ் நாடு.

இவ்வாறு பாமர மக்கள் உணர்ந்து பேசாதவொன்றை எப்போதும் இசைக்குமாறு பாரதியார் பச்சைத் தமிழில் பேசி, என்றும் வளரும் நாட்டு உரிமையின் உணர்வாற்றலால் என்றுமுள சிறப்புடைய பழமையானதை பா மூலம் நெய்து மக்களுக்கு தன்மான வுணர்வு மீக்கூர, தன்னாடு தானறப் பெறுதலை அறிவுறுத்திய நெறி சற்று சிந்தித்து வியக்கற் பாலது.

பாரதியாரது சொந்த நாட்டன்பு பரந்து விரிந்திட, அது பாரத நாட்டு மக்களுள்ளங்களை ஒன்று சேர்த்து உயர்த்தி ஒரு குல மாக்க அவாவியது. பின்னர் பாரத நாட்டுச் செல்வப் பன்மையினை புகழ்சால் முரசால் முழக்கு வாராயினர். பாரத நாடு, தவத்தினிலும், ஞானக் காட்சியிலும், துறவுப்பேற்றிலும், கலை யுணர்விலும் பிறவியை நலமுடைய தாக்க வல்ல நாடென்பர்.

ஞானத்திலே பர மோனத்திலே—உயர்
மானத்திலே, அன்ன தானத்திலே
கானத்திலே அமுதாக நிறைந்த
கவிதை யிலேயுயர் நாடு.

ஆண்மையிலும் இரக்க வுணர்விலும் ஈதலறத்திலும் மேன்மை மிக்க நாடென மெச்சுவார்.

தீரத்திலே படை வீரத்திலே—நெஞ்சில்
ஈரத்திலே யுபகாரத்திலே
சாரத்திலே மிகு சாத்திரங் கண்டு
தருவதிலே யுயர் நாடு.

ஒழுக்கம் பூண்டு விழுப்ப மெய்துதற் குரிய புகழும் நலமும் மண்டிய நாடென மகிழ்ந்து வலியுறுத்துவார்.

நன்மையிலே யுடல் வன்மையிலே—செல்வப்
பன்மையிலே மறத் தன்மையிலே
பொன்மயி லொத்திடு மாதர்தங் கற்பின்
புகழினிலே யுயர் நாடு.

மக்கட்குச் செய்தொழிலால் வாழ்வளித்து பல ஆக்கமும் உயர் நோக்கமும் ஊட்டும் நாடென அறிவுறுத்துவார்.

ஆக்கத்திலே தொழி லூக்கத்திலே—புய
வீக்கத்திலேயுயர் நோக்கத்திலே
காக்கத்திறல்கொண்ட மல்லர்தஞ் சேனைக்
கடலினிலே யுயர் நாடு.

பாரதநாடு வண்மையிலும் தண்மையிலும் உண்மையிலும் பெருவழக்குடையதாய்ப் பயன்பட்டு வளங்கொழித்து வந்த பேருண்மையினை தெளிந்திசைப்பார்,

வண்மையிலே யுளத் திண்மையிலே—மனத்
தண்மையிலே மதி நுண்மையிலே
உண்மையிலே தவறாத புலவர்
உணர்வினிலே யுயர்நாடு

தவயறிவாலும், மெய்யுணர்வாலும் அருள் நோக்காலும் விழுப்பம் மேவி விளங்கி மேன்மை யுற்றதால் மெத்த புகழுடையது பாரத நாடு என்றுணரவைப்பார்.

யாகத்திலே தவ வேகத்திலே—தனி
யோகத்திலே பல போகத்திலே
ஆகத்திலே தெய்வ பக்திகொண்டார் தம்
அருளினிலே யுயர்நாடு.

இயற்கையின் இயல்வளஞ் செறிந்து நலனும் நனி நாகரீகமும் பயவாநிற்கும் செம்மைவாய்ந்த நாடு பாரத நாடென்பர்,

ஆற்றினிலே சுனை யூற்றினிலே—தென்றற்
காற்றினிலே மலைப் பேற்றினிலே
ஏற்றினிலே பய னீந்திடுங் காலி
யினத்தினிலே யுயர்நாடு.

தோட்டத்திலே மரக் கூட்டத்திலே—கனி
யீட்டத்திலே பயி ரூட்டத்திலே
தேட்டத்திலே யடங்காத நிதியின்
சிறப்பினிலே யுயர்நாடு.

இவ்வாறு நாட்டுப் பண்களை பாரதியார் இசைத்து மக்களுக்கு, பண்பும், அறிவும், வீரமும் ஞானமும் பொலியச் செய்யும் பொருளுட்பங்களை, தனக்கே உரித்தாகக் கொண்ட ஓசையினிமையுடைய தமிழ் மொழியால் உணர்த்துவாராயினர். இத்தகையதாய், பாரதியார் நாட்டுப் பற்று கிளக்கும் பாக்களைப் பாடிப் பாடி, வீரியத் தினவும் சுதந்திரக் காதலும் நிரம்பிய மனத்தினை யுடையாராயினர். சுயேச்சையால்

தைரியம் இவர்பால் பிறக்கவே, இயற்கைப் புலமையின் விளக்கத்தை மறைக்கும் கட்டுகளும், தட்டுத் தடைகளும் தகர்ந்தன. கட்டுக் கறிகுறி யாகிய தன்னலம், பாரதியாரிடத்திலிருந்து அகன்றது. தன்னலமற்ற நிலையில் திகழும் நாட்டுணர்வு பாரதியார் நெஞ்சகத்தே வளர, அவரது உள்ளத்தில் நாட்டின் தெய்வத்தாய் கால்கொண்டது. பாரதியார் தமக்கு தெய்வத் தாய் இயற்கைக் கூறுபாடுகளில் அறிவைச் செலுத்தி துணை புரிதலை யுணர்ந்தார். இவ்வணம் நாட்டின் தெய்வத்தாய் இவரது உயிர்க்கு விடுதலை நல்கும் நெறியினை யுணர்த்தவே, ஆகாயப் புலன்களில் பாரதியாரது மனம் கட்டின்றி பறந் துலாவ அவாவியது. நாட்டுக் காட்சிகளனைத்தும் பாரதியாரது கவிதையில் வெவ்வேறு உருப்பெற்று பிறப்புரிமையினை உணர்த் தும் பெற்றி வாய்ந்து நிலவுவனவாயின.

வெள்ளிப் பனி மலையின் மீதுலவுவோம்—அடி
மேலைக் கடல் முழுதுங் கப்பல் விடுவோம்
பள்ளித்தல மனைத்தும் கோயில் செய்குவோம்

—எங்கள்

பாரத தேசமென்று தோள்கொட்டுவோம்.

என புன்னாகவராளி ராகத்திற் பொருளுணர்ந்து மக்கள் பாடுங்கால், வானோக்கிப் பரந்து பொலியும் பாரதியாரது கவி நடையில் அவரது ஊகம் எவ்வெவ்வாறு சிறகடித்து பாய்ந் தேறிச் செல்லும் பான்மையது என்பது சிந்திக்கப்படும். பாரத தேயம் என்று கூறுமளவில் மிடிப்பயமும் துயர்ப்பகையும் வீழ்த்தப்படுமென்று பாரதியார் கூறி உண்மையான உள் ளெழுச்சியின் தன்மையினை மக்களுக்குப் புகட்ட முற்பட்டார். பாரதநாடு சுதந்திரப் பொலிவு பெற்ற ஞான்று அது எவ்வாறு இன்ப மலர்ச்சியால் வீறுபெற்றிருக்கு மென்பதை பாரதியார் தமது காட்சிப் புலமையில் மிதந்து வரும் கவிக் கனவுகளின்வழி எடுத்துக் காட்டுவது தெளிதற்பாலது.

அறிவுண்மை ஆராய்ச்சி மிகக் கொண்டு வானவூர்தியில் இமயக் குவட்டின் மீதி லுலாவி அலைகடல் முழுவதும் கப்பல் செலுத்துவோம்! வாழ்வில் ஒரு புதிய களை பொலிய அறவோர் பள்ளித்தலமனைத்திலும் கலைக்கோயில் கொள்ளுவோம்! என மக்களது ஆற்றலைத் தூண்டி அழகுக் கலையினைப் புலப்படுத்து கிருர். பின்னர் நாடு சுதந்திரமுள்ளதாகக் கனவு கொண்டு நாட்டி னியல்பை மகிழ்ச்சி யூட்டும் திறத்தால் கீழ் கண்டவாறு வடித்துக் குறிப்பிடலானுர். சிங்களத் தீவிற்கு பாலம் அமைப்

போம்! சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம்! வங்கத்தி லோடும் கங்கைக்கு கால்வாய்கள் வகுத்து பயிர்காணப் பெரு மையத்து நாடுகளில் விளையுளைச் செழிக்கச் செய்வோம்! பொன், கரும்பொன் முதலிய பொருள்களை சுரங்கையிலிருந்து குடைந் தெடுப்போம்! இவைகளை எங்ஙனும் சென்று விற்று புகழ் மணக்கப் பொருளினை குவிப்போம். மேற்கரையினின்று நன் முத்துகளுக்காக நயந்து வரும் பல நாட்டு வணிகர், நமக் இனிய பொருள் தந்து நம் மருள் வேண்டிநிற்க, தென்கடலில் முத்து குளிப்போம். சிந்து நதியின் மிசை நிலவினில், சேரத்து இளம் பெண்களுடன் களிதரும் தெலுங்குப் பாக்களினை இசைத்து தோணிகளோட்டி அறிவு மலர்ச்சியால் இன்பம் நுகர்ந்து வாழ்விற்கு அழகின்பஞ் செழிக்கச் செய்வோம்! கங்கை பாயும் தேயத்து கோதுமை முதலாய கூலப் பண்டங் களை காவிரி நாட்டு வெற்றிலைக்கு பண்டமாற்று கொள்ளு வோம்! சிங்க மராட்டியர் தம் கவிதைகளைக் கேட்டு சேர நாட்டுத் தந்தங்களை பரிசளிப்போம்! காசிநகர்ப் புலவர் பேசும் அறவுரைகளை தமிழ்சேர் காஞ்சியிற் கேட்குகுபடி ஒலி பரப்புக் கருவிகளைக் செய்வோம்! இராசபுரத்து வீரர்களுக்கு நல்லியற் கன்னடத்து தங்கத்தை அளிப்போம்.

பட்டாடையும் பஞ்சுடையும் நெய்து மலையாகக் குவித்து அவைகளை நன் மணித்திரள் கொண்டு வரும் உலக வாணிபருக்கு அருளுவோம்! ஆயுதங்களை சமைப்போம்! நல்ல காகிதம் செய் வோம! பொருளைப் பெருக்கும் ஆலைகளை நிறுவுவோம்! கலைச் சாலைகளை நிலை நாட்டுவோம்! ஓயாதும் தலை சாயாதும் நாட் டிற்கு உழைத்து, வாய்மை வழி நின்று, வாழ்வினை மொழியின் பண் பாட்டியலின் நெறி கொண்டு தழுவச் செய்வோம்! உழு படைகள், குடைகள், கோணிகள், இருப்பாணிகள் முதலியன செய்வோம்! மண் மிசையும், விண் மிசையும் செல்லும் ஊர்தி களையும் கடற் பரப்பில் கண்ணியமாக ஏகும கப்பல்களையும் செய்வோம்! இஃதோடமையாது, நிறையுடை மறை மொழி யினையும் உணர்ந்து கற்போம்! அரசியல் நுட்பம், வான நூலா ராய்ச்சி முதலாய சாத்திரங்களையும் ஆய்வோம்! வானை யளந்து

திங்கள் மண்டலத் தியல்பை காண்குவம்! ஆழ்ந்திருக்கும் கவி யுள்ளமதைக் காணவல்ல அணியுடைக் காவியத்தையும், கலைப் பண்பு உணர்த்தும் ஓவியமும் செய்வோம்! பலகலை வளர்த்து நம் நாடு பீடுற விளங்க, உலகத் தொழிலத்தனையும் நாமுவந்து செய்வோம! கூர்ந்து நோக்கின், தொழிலுக்குச் சாதியில்லை. சாதி யிரண்டொழிய பிறிதில்லை. அறநெறிக் கண்ணின்று பிறர்க் குதவும பேராண்மையுடையார் மேலவர். ஏனையர் பூரியோர்! இதனுன், பாரதியாரின் நாட்டு உரிமையுணர்வால் உந்தப்பெற்ற உள்ளக் கிடக்கையின் செமமை நனி விளங்கும்

இவ்வாறு பாரதியார் மக்களுள்ளத்தில் வாடிக்கிடந்த உணர்ச்சிகள் யாவும் மறு மலர்ச்சியுற, நாட்டன்பையும மன வுறுதியையும் ஊட்டினுர். இஃதோடமையாது, நாட்டில் அறிவுக் கலையும், தொழிலும் வளமையும் வாணிபமும் பொலியச் செய்யாவிடின், நாடு வறுமைப் பிணியுற்று சீரழிந்து அந்தி போல் அருகு மென்றும், மக்கள் உரிமை வாழ்வினை எய் தாது ஊன அறிவுமிக, மீளாத் துயரில் படிந்து இன்பத்திற் கேங்கும் இழி நிலையினை அடைவர் எனக் கருதினுர். இதனுற் ருன் நீரற்றக் குளத்தின்கண் ஒட்டிக் கிடந்த கொட்டியும் ஆம் பலும் நெய்தலும் புதுப்புனல் வருங்காலை உயிர்த்தெழுந்து எழில் மிக பூத்தொளிர்வதுபோல், பாரதியார், வீறுகொண்டு விடுதலை முழக்கம் புரியும் வேட்கைப் பாக்கள் வழி நாட்டுணர்வை, வலிமையொடு மக்களுள்ளத்தில் தளிர்த்துப் பொலியச் செய்தார். இவ்வாறே நாட்டார்வத்தையும் நாட்டுத் தொண் டினையும் நாட்டுணர்வொடு மக்கள்பால் கிளர்ச்சி பெற நிலவ வைத்து, நாட்டன்புக் கனலை ஒளிப் பிழம்பாக வளர்த்து, அதனையே பாரதியார் வணங்கலானுர்.

(தொடரும்.)

ஆங்காங்கே (17)

திரு. கோ. தியாகராசன், G. M. V. C., தஞ்சை

(1) பொறி=நெருப்புப் பொறி—கற்கால மக்களுக்கு முந்தியவரும் காட்டில் மரத்துடன் மரம் உரூய்ந்து தீப் பற்றித் தீத் துகள்கள் பறப்பதைக் கண்டனர். இத் தீத் துகளுக்குப் 'பொறி' யெனப் பெயரிட்டனர்.

(2) பொறி=கருவி—பின் கற்கால மக்கள் ஒரு கல்லைக் கொண்டு மற்றொரு கல்லை யடித்து கருவிகள் செய்தனர். இவ் வினை நிகழும் பொழுதும் பொறிகள் உண்டாயின. அப் பொறிகள் உண்டாக அடித்துச் செய்த கருவிகளையும் பொறிகள் என்றனர். இவ்வாறு விளைக்கும் வினைப் பயனுக்கும் ஒரு சொல்லே வழங்குவது தமிழ்ச் சொல்லாக்க முறைகளில் ஒன்று. (எ. கா.) மரத்தின் கிளைகளை சிறு துண்டுகளாக வெட்டுகிறான். வெட்டிய துண்டங்களை ஒன்றா கப் பிணைக்கிறான். அவ் வினையைக் குறிக்குஞ் சொல் 'கட்டு' என்பதாகும். வினையைக் குறிக்கும் இதே சொல் பின்னர் கட்டிய தொகுதிக்கும் 'கட்டு' என்னும் பெயராக வழங்கு கிறது. ஆகவே, இதனால், வினையையும் வினைப் பயனையும் குறிக்க ஒரே சொல்லை வழங்கினரென்பதை அறிகின்றோம். ஆங்கிலத்திலும் இம் முறை உண்டு. துணிகளை ஒரு கட் டாகக் கட்டுவதை 'bundle' என்னும் சொல்லால் அவ் வினை குறிக்கப்படும். இவ்வாறு கட்டப்பட்ட துணி மூட்டை யும் bundle என்னுஞ் சொல்லால் குறிக்கப்படும். அதாவது வினையும் வினைப் பயனும் ஒரே சொல்லால் குறிக்கப்படுகிறது.

(3) பொறி=வெட்டு—பின் இருப் புளியால் கற்களில் குறிகளை வெட்டிய பொழுது பொறிகள் கிளம்பின. எனவே அவ்வாறு வெட்டும் வினையையும் பொறித்தல் என்றான்.

(4) பொறி=குறியீடு:—மேற் கூறியவாறு பொறித்த குறியீடுகளையும் (எழுத்துக்களையும்) பொறி என்றான்.

(5) பொறி=புள்ளி:—இவ்வாறு வெட்டிய பொழுது எழுந்த பொறிகள் உடலில் பட்டு எரிச்சல் உண்டாக்கியது. அந்த இடங்களைக் கையால் தேய்த்தான். அவ் விடங்கள் புள்ளிகளாய்த் தோன்றின. எனவே, பொறிகளால் உண்டாய புள்ளிகளையும் பொறி என்றான்.

(6) பொறி=விதி:—மண்டை ஓடுகள் ஒன்றோடொன்று பொருந்தும் இடங்களில் கோணல் கோணலாக குறியீடுகள் போல் உள்ளன. இக் குறிகள் தங்களுக்குத் தெரியாத எழுத்துக்களால் ஒருவனின் வாழ்க்கை வளப்பத்தைக் குறிப்பன என நினைத்து இக் குறிகளைப் 'பொறி' என்றான். இக் (இக் குறிகளை தலை யெழுத் தென்கிறோம்.) எனவே, 'பொறி' எண்ணுஞ் சொல் விதி யென்னும் பொருள் பெற்றது. (ஆங்கிலத்தில் இக் குறிகளைத் தையல்கள் என்பர். Sutures.)

'எ. கா. பொறியின்மை யார்க்கும் பழியன்று அறிவறிந்து ஆள்வினை யின்மை பழி'' (தி. கு. 618)

(7) பொறி=Sensory organs—கண், காது, மூக்கு முதலியவற்றையும் பொறிகள் என்றனர். இவை பார்வை, ஓசை, மணம் முதலியவற்றை உணருவதற்குக் கருவிகளா யிருப்பதால் இவைகள் பொறிகளாயின.

II. பறி=வலுவில் பிடுங்கல். (Obtain by force) மாங்காய் அவரக்காய் முதலியவற்றை பறிக்கிறோம். அதாவது வலுவில் பிடுங்குகிறோம். இப் பொருளே இச் சொல்லிற்கு முதற் பொருளாக வேண்டும்.

(2) பறி=கொள்ளை—வழியில் போகிறவர்களை மடக்கி அவர்களுடைய பொருள்களை வலுக்கொண்டு கவருதல் வழிப்பறியாகும்.

(3) பறி=தோண்டு:—வலுக்கொண்டு மண்ணைத் தோண்டி யெடுப்பதால், பறி=தோண்டு.

(4) பறி=பிடிப்பதற்கான கருவி:— ஒரு எலியை வலுக் கொண்டு பிடித்துக்கொள்ளும் கருவி 'பறி' யாயிற்று

(5) பறி=பொன்:—மண்ணைத் தோண்டி, அம் மண்ணி லிருந்து எடுக்கப்படுவது பொன். எனவே விளையும், விளைப் பயனும் ஒரு பெயர் பெற்றது. பறி=பொன்.

III. மாற்று.

மறு—செய்வினை மாற்று—செயப்பாட்டு வினை.

(1) மாற்று—(Transfer) ஒருவர் தன்னை தஞ்சையிலிருந்து மதுரைக்கு மாற்றுவதாகச் சொல்லுகிறார். அதாவதுகொற்றத்தார்(Government authorities) இவரை ஓரிடமிருந்து வேரிடம் மாறச்செய்தார்கள் என்கிறார்.

(2) மாற்று—(Change) ஒருவரிடம் ஒரு ரூ. 100/- நோட்டைக் கொடுத்து மாற்றி வரச்சொன்னால் அவர் 10 ரூபாய் நோட்டுகளும் சில 5 ரூபாய் நோட்டுகளும், மற்றவையாகவும் மொத்தத்தில் நூறுரூபாய் பொருமானமுள்ளதாக மாற்றிவருவார். இங்கு நூறுரூபாய் நோட்டு வேறு மதிப்புள்ள நோட்டுகளாக மாறின.

(3) மாற்று—(Exchange) ஒரு பொருளுக்கு ஈடாக, வேறு பொருளை ஏற்றல், இவ்வகையில் பண்டமாற்றுதல் ஏற்படுகிறது. இங்கு ஒரு பொருள் வேறு பொருளாக மாறியது.

(4) மாற்று=மதிப்பு அல்லது தகைமை. மேற்கூறியவாறு பண்டமாற்று ஏற்படுங்கால் ஒருபடி உப்பிற்கு ஒருபடி அரிசி கொடுப்பார் இக்காலத்தில்லை. ஒருபடி உப்பிற்கு ஒரு ஆழாக்கு அரிசி கொடுக்கலாம். எனவே உப்பிற்கு ஒரு மதிப்பும் அரிசிக்கு ஒரு மதிப்பும் ஏற்படுகிறது. இது தகைமையைப் பொருத்தது.

'மாற்றறியாத செழும் பசும் பொன்' என்றார் அதாவது ஈடில்லாத. அல்லது மதிப்பிடமுடியாத பசும் பொன் என்றார், (ஒருகாலத்தில் 'பொன்' என்னுஞ் சொல் உலோகத்திற்குப் பொதுப்பெயராய் வழங்கியது. கரும் பொன்=இரும்பு; செம்பொன்=செம்பு; வெண்பொன்= வெள்ளி; பசும்பொன்=தங்கம்.) இதுபொழுது பசும் பொன்னிற்கு $10\frac{1}{2}$ மாற்று என ஒரு மதிப்பிட்டு, உலோகம் கலந்த பொன்னை உரைத்துப்பார்த்து தங்கத்திற்கும் இதற்கும் என்ன தகைமை வேறுபாடிருப்பதென வரிந்து அதற்கேற்ற விலைபோடுகிறார்கள். எனவே மாற்று= Standard.

(5) மாற்று=antidote—நஞ்சுண்ட ஒருவனுக்கு அந்நஞ்சு தீங்குசெய்யாமல் மாறுவதற்காக மருந்து கொடுக்கிறார்கள், இவ்வாறு நஞ்சை நஞ்சற்றதாக மாற்றும் மருந்து மாற்று என்னும் பெயர்பெற்றது.

(6) மாற்றம் = Change of Mind—தன்னிடத்தில் வேற்றுமை கொண்டவர் தன் மனதை மாற்றிக்கொள்வதை மன மாற்றம் என்கிறோம்.

(7) மாற்றார் = Foe :—மேற் கூறியபடி தன்னிடத்தில் வேற்றுமை கொண்டவரைக் குறிக்கும் இச்சொல் எதிரி = Opponent எதிராயிருப்பவர்; பகைவர் = Enemy (பகு—பகுதி) மாற்றார் = Foe ம் ill wisher. மனமாற்றத்தால் தனக்குக் கெடுதி செய்ய விரும்புவோரைக் குறிக்கும் இச்சொல்.

இச் சொல்லின் பொருள் மாற்றாந்தாய் என்னுஞ் சொல்லில் விளங்கும். தாய் மாறியது மட்டும் போதாது, தாயின் அன்புத் தன்மை போய் மூத்தாள் மக்களுக்குத் தீங்கு செய்யும் மன மாற்றம் அடைந்தவள் மாற்றாந்தாயாவாள். இது பொழுது இச் சொல் இப் பொருளில் தான் பெரும்பாலும் வழங்குகிறது.

சொல் விளக்கம்.

தள், தடு, தளை, தட்டு, தட்டை, தட்டம்.

(1) தள் ;— இச் சொல்லிற்கு இரண்டு அடிப்படை பொருள்களுண்டு. (அ) தள் = இடத்திலிருந்து பெயரச் செய்தல் 'வண்டியைத் தள்' என்றால் அவ்வண்டி யிருக்குமிடத்திலிருந்து வேறு இடத்திற்குப் பெயரச் செய் என்பதாகும். தள் = Push. (ஆ) தள் = தவிர். கூட்டத்தில் தன் மேல் மோத வருபவனைத் தள்ளி மோதாமற் செய்வது தள்ளுதல் தள் = Prevent.

(2) தளை .— அகப்பட்ட திருடனின் கை கால்களைக் கட்டுதல் தளைதலாகும். அதாவது அத் திருடன் ஓடிப்போகமற் செய்வது.

(3) தளை :— அவ்வாறு கட்டுவதற்காகப் பயன்படுத்தப் படும் பொருளும் இப் பெயர் பெற்றது.

(களை = நீக்கு என்பது பொருள். இவ்வாறு நீக்கப்படும் பொருளும் 'களை' என்னும் பெயர் பெற்றது. எனவே 'களையைக் களை' என்கிறோம். இதுபோலவே 'தளையைத் தளை' என்கிறோம்.)

(4) தடு = தவிர் (Prevent) தன்னைத் தாக்க வருபவனின் குச்சி தன் மேல் படாமல் தவிர்ப்பது தடுப்பதாகும். எனவே, காத்துக்கொள் என்னும் பொருளும் பெற்றது. (Protect)

(5) தடை = தடுக்கும்பொருள் :— நோய் வராமல் கடவுளை வேண்டித் தடை யணிகிறோம்.

கொற்றத்தார் கருத்துக்களுக்கு மாறுபட்ட கருத்துக்களை மக்களிடை புகுக்காமல் தடுப்பதற்கும், கலகங்கள் ஏற்படாமல் தடுப்பதற்கும தடை உத்தரவுகள் மலிந்துள்ளன.

(6) தட்டு மூற் கூறியதுபோல ஒருவன் குச்சியை மற்றொரு குச்சியால் தடுப்பது தட்டுதலாகும்.

(7) தட்டை மேற்கூறியவாறு ஒன்றுடன் ஒன்று மோதுங்கால் இடையில் ஒரு மெல்லிய பொருலிருந்தால் அது சப்பையாகும் இவ்வாறு என் அன்னை ஒரு உளுந் துருண்டையைத் தட்டினல் அது தட்டையாகும்.

(8) இதுபோலவே இடையிலுள்ள பொருள் வெள்ளியானல் அதுவும் சப்பையாகும். இவ்வாறு தட்டையாகச் செய்பவன் தட்டான் எனப்பட்டான். அடியிலுள்ள பணையும், அதன் மேல் அடிக்கத் தூக்கும் சுத்தியும் வலுவுள்ளன, இரும்பாலானவை, இவைகளின் இடையில் அகப்பட்ட பொருள் நசுங்காமல் நுணுங்கிப்போகுமானல் தட்டானின் தொழில் திறமே தோன்றுது. தட்டானின் தொழில் முழுவதும் நசுங்கும் இயல்பினதாய், அகன்றும் நீண்டும் கொடுக்கும் பொன்னுலோ வெள்ளியாலோ ஆயதாகும். ஆதலால் தட்டையாக்கும் தொழிலைச் செய் பவன் தட்டான் எனப்பட்டான். தட்டுதலால் தட்டான் என்னும் பெயர் வந்ததென்பது தவறு. ஏனென்றல், நுணுங்குதலும் உண்டு, நுணுங்காது அகன்று நீண்டு போதலும் உண்டு. இங்கேபிற்கூறிய கருத்தே தட்டானுக் கேற்றதாகும். ஆகவே, தட்டையாக்கும் தொழிலாளி தட்டானெனப்பட்டான்.

(9) தட்டு இது வினைச்சொல்லாயும் பெயர்ச் சொல் லாயும் வழங்கும். தட்டையாக்கப்பட்ட பொருள் தட்டு (எ. கா) வெற்றிலைத்தட்டு.

(10) தட்டு=மரவட்டணை முற்காலத்தில் மறவர்கள் தங்கள் எதிரியின் தாக்குகள் தங்கள்மேல் படாமல் தடுப்ப தற்கு மரத்தினல் வட்டமாகச் செய்யப்பட்ட தட்டை உடலோடு அணைத்துப் பொருதுவர் (Shield) எனவே இப் பொருள் தட்டு என்னும் பெயர் பெற்றது. தட்டையா யிருப்பதுமன்றி, தாக்குதலைத் தடுப்பதினல் இதற்கு 'தட்டு' என்னும் பெயர் மிக்கப் பொருந்தியதே

(11) தட்டம் தட்டுத் தன்மையைக் குறிப்பது தட்டம். மேற்காட்டியது போலவே, வள், வளை, வட்டு, வட்டை வட்டம் என்னும் சொற்களின் பொருள்களை ஆய்ந்தறிக.

பொருந்துமா? (௯௬)

உளநூலாசிரியர் புலவர்மணி M.குஞ்சிதபாததேசிகர், நன்னிலம்

உமையொரு பாகன் அணிகின்ற பொருள்கள் பல. அவற்றுள் அறுகும் ஒன்று. அறுகம் புல் சிறு விடங்களைப் போக்கும் இயல்புடையது, இறைவனின் அடையாள மாலை என்று சிறப்பித்துக் கூறுகின்ற கொன்றைத்தார் போல மாணிக்கவாசகரின் மணி மொழிகளிலே அறுகம் புல்லினாலாகிய மாலையே சிறப்பாகக் கூறப் பட்டுள்ளது.

(1) 'தாளி யறுகின் தாராய்' (போற்றித் திருவகவல் வரி 20)
(2) 'தாளி யறுகினர்' (அன்னைப்பத்து 8)
(3) 'ஆய மொழிக் கிள்ளாய் அள்ளூறும் அன்பர்பால்
மேய பெருந் துறையான் மெய்த்தா ரென்—தீயவினை
நாளு மணுகா வண்ணம் நாயேனை யாளுடையான்
தாளி யறுகா முவந்த தார்' (திருத் தசாங்கம்)

என வருகிற இடங்களில் அறுகின் முன் இயைக்கப் பட்டுள்ள தாளி என்ற ஒரு சொல்லைப் பற்றியே ஈண்டு ஆராய எடுத்துக் கொண்டது.

அறுகம் புல்லின் இயற்கை நீரற்ற காலத்தில் வேர் மட்டுந் தான் தெரியும். மழையையோ, தண்ணீரையோ கண்ட மாத்திரத்தில் கொடி விட்டு செழித்து வளரும் இயல்புடையது. இவ்வாறு கொடியாகப் படர்தல் பற்றி 'கொடியறுகு' என்று சிலப்பதிகாரத்தில் சிறப்பிக்கப் பட்டுள்ளது என்க.

இவ் வுலகின்கண் வாழ்த்துவோரும் 'ஆல் போற் றழைத்து அறுகு போல் வேர் விட்டு' என்று கூறுகின்றமையாலும், அறுகம் புல் வேரினாலே மிகவும் வலுவுடையது என்பது பெறப்படும். இக் கருத்துள் ளடக்கியே முத்தொள்ளாயிரம் என்ற இலக்கியத்திலே 'வேர் அறுகை' என்று சிறப்பிக்கப்பட்டுள்ளது,

'காரப் பெய்த.........பதவப்புன் மாந்தி' கலித்தொகை நவில்வதும் ஓர்க.

மேற் காட்டிய செய்யுள் வழக்கே யன்றி உலக வழக்கிலும் கருணைக்கிழங்கில் வேருள்ள அடிக் கிழங்கை 'தாளிக் கிழங்கு' என இன்றும் கூறுவதால் வலியுறும்.

இதுகாறுங் கூறியவற்றால் மாணிக்கவாசகர் அறுகின் இயற்கையையும் வழக்குண்மையைத் தழுவியும் கூறியிருத்தலை அறிஞர் அறிந்து இன்புறுவர் என்றே இம் மட்டோடு இக் கட்டுரையை முடிக்கின்றோம்.

பொருந்துமா? சிந்திக்க.